1973 மார்ச் 29]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பொதுவாக விஷம் ஒரு முறை உடம்பில் ஏறி முறிந்து விட்டால், பின்னர் விஷத்திற்குப் பலம் இருக்காது. ஆனுல் இதைப் பொறுத்த வரையில் கடுமையான நச்சு அல்ல. பின்விளைவுகள் அந்த ஐஸ்கிரீம் உண்ட மாணவர்களுக்கு எதுவும் ஏற்படவில்லை. இனிமேல் அவர்கள் ஐஸ்கிரீம் சாப்பிடுவதில் ஜாக்கிரதையாக இருப்பார்கள் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தக் கேள்விகளையும் பதில்களையும் படித்துப் பார்த்தாலே பயப்படுவார்கள் என்று நினைக்கிறேன்.

Medical facilities for pensioners at Madurai

*558 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the medical facilities extended to pensioners, have not reached the pensioners in Madurai district; and

(*b*) if so, the steps taken to give effect to the order?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த ஓய்வு பெற்ற சர்க்கார் ஊழியர்களுக்கு பாஸ்-புக் கொடுக்கப்படுமா? கொடுக்கப்படவில்லை என்று சொல்கிருர்கள். அவர்களுக்கு விரைவில் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அவர்களுக்குப் பென்ஷன் தருகிற அந்த அலுவலகத்திலே இந்த பாஸ் புக் அல்லது அதற்கான புக் வழங்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்களும் ஒப்புக்கொண்டு வழங்கியிருக்கிருர்கள்.

The Pay and Accounts Officer or Treasury Officers as the case may be have been authorised to sanction reimbursement of medical expenses incurred by Government officials for their treatment or treatment of members of their families at the instance of the concerned authorised medical attendants by accepting the relevant applications prescribed for the purpose.

என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல், அதற்காக "ஐடன்டிடி கார்டு" வழங்குவதையும் குறிப்பிட்டுள்ளனர்.

Government pensioners eligible for pre-medical concessions will be supplied with identity cards in the form prescribed in the G.O. at Government cost for taking treatment in Government medical institutions. என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது முறைப்படி கொடுக்கப்படும்.

மதுராந்தகத்திலுள்ள அரசு மருத்துவமனை

* 559 வினு.—திரு. சி. ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் நகரிலுள்ள அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சைப் பிரிவு ஒன்று துவக்குவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

திரு. சி. ஆறுமுகம்: தலைவரவர்களே, தேசிய நெடுஞ்சாலையில் உள்ள மதுராந்தகத்தில் உள்ள மருத்துவமனையில் அறுவை சிகிச்சை நிலையம் இல்லாததால்—அங்கே அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு அதனுல் பல பேர் உயிர் இழக்கும் நிலை ஏற்படுகிறது—அங்கே ஒரு அறுவை சிகிச்சை நிலையம் ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அங்கே அப்படியே ஒரு அறுவை சிகிச்சை நிலையம் ஏற்படுத்தப்பட்டாலும் ஸ்பெஷலிஸ்ட் சிகிச்சை மதுராந்தகத்தில் வழங்க இயலாது. அதற்காக வேண்டிய எல்லாவிதமான வசதிகளும் மதுராந்தகத்திற்குப் பக்கத்திலுள்ள செங்கல்பட்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. விபத்து வராமல் தடுப்பதற்கு அந்தத் துறையில் உள்ளவர்கள், அந்த ஊரில் உள்ளவர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அப்படி விபத்து ஏற்பட்டாலும் நண்பர் ஆறுமுகம் போன்றவர்கள் செங்கல் பட்டுக்கு அவர்களை அழைத்துக்கொண்டு போய் எல்லா விதமான ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும்.

Working Women's Hostels.

* 560 *Q*.—Thiru A. SUBRAMANIAM: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) the number of Working Women's Hostels in the State

(*b*) the places where they are located; and

(*c*) the total number of inmates in these Hostels?